# ஆற்றுப்படை இலக்கியங்களில் நெய்தல் நிலத்தவர் வாழ்வியல்

# Weaving Landsmen's Life in Aatruppadai Ilakkiyam

*மா. போகராஜ்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி
உடுமலைப்பேட்டை

**M. Pogaraj**
*Ph.D Scholar, Department of Tamil*
*Government Arts College*
*Udumalpet*

## ஆய்வுச் சுருக்கம்

*தொன்மை வாய்ந்த பழந்தமிழ்ச் சமூகத்தில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் தனித்துவமானது. பெருங்கடல் பரப்பைச் சார்ந்து இயங்குவது இம்மக்களின் வாழ்வியலாகும். மீன்பிடி பரதவர்கள், உப்பு விற்கும் உமணர்கள், கள்விற்கும் நுளையச்சியர்கள் போன்ற விளிம்புநிலை மக்களை உள்ளடக்கியது நெய்தல் திணைச்சூழல். இவர்களின் அன்றாட வாழ்க்கை முறைகள் பிற நிலத்து மக்களுடன் பின்னிப் பிணைந் திருப்பதைச் சங்கப் பாடல்கள் நமக்கு எடுத்து ரைக்கின்றன. அதன்படி சங்ககால நெய்தல் நில மக்களின் வாழ்விடம், வழிபாடு, விருந்தோம்பல் பண்பு, பொழுதுபோக்கு போன்ற வாழ்வியல் கூறுகளைப் பற்றி எடுத்துரைப்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்விற்கு தரவுகளாக ஆற்றுப்படை நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *நெய்தல் நில மக்கள், பரதவர், உமணர், வலைஞர், நுளையர்.*

## Abstract

*The lifestyle of Neythal land people is unique in the ancient Tamil society. Dependence on the ocean surface is the livelihood of these people. The Sangam songs tell us that the weaves' daily lives are interwoven with those of the people of the land, where the weavers include marginal people such as fishing Bharathavas, Umanas who sell salt, and who sell Wood. Accordingly, the purpose of this study is to highlight the elements of life such as life, worship, hospitality and entertainment of the weaving land people during the Sangam period. The data for this study as 'Pathuppattu' also been used.*

***Keywords:*** *Neythal People, Bharthavar, Umanar, Valaingar, Nulaingar, Fisherman*

**Citation**

Pogaraj, M. "Weaving Landsmen's Life in Aatruppadai Ilakkiyam." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 19–23.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095848*

**முன்னுரை**

*சங்க கால மக்களின் வாழ்வியல் திணைசார் சூழலை உள்ளடக்கியதாகும். ஐவகை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் அவரவர் சூழல் அமைப்பிற்கேற்ற வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். இதில் கடலையும் அதன் சுற்றுப்புறத்தையும் மையமாகக் கொண்டு வாழ்ந்த நெய்தல் நில மக்களின் உணவும், தொழிலும், வாழ்க்கை முறையும் பிற நிலத்தவர்களினும் மாறுபட்டதாகும். புலால் நாற்றமும் உப்பின் உவர்ப்பும் சூழ்ந்த இவர்கள் வாழ்வியல் சங்ககாலம் தொட்டு இன்றுவரை நீள்கின்றது. இத்தகைய தொல் பழமை வாய்ந்த நெய்தல் நில மக்களின் வாழ்வியல் செய்திகளை ஆற்றுப்படை இலக்கியங்கள் வழி அறிவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**நெய்தல்நில மக்கள்**

**பரதவர்**

*சங்ககால நெய்தல் நிலம் சார்ந்த வாழ்வியலில் முதன்மையான மக்கள் பரதவர்கள். பெருங்கடலில் சென்று வலிமையான மீன்களை வேட்டையாடுவது இவர்களின் முதன்மைத் தொழிலாகும். "பரதவர்" என்ற சொல் "தொகுதி" பரந்த என்ற பொருள்களையுடைய பரப்பு என்னுஞ் சொல்லுடன் தொடர்புடையதாக இருக்கலாம். கடலிற் செல்வோர் என அதற்குப் பொருள் கூறலாம். (தமிழர் சால்பு-2013.ப.147) என்று சு.வித்யானந்தன் குறிப்பிடுகிறார். "புன்தலை இரும் பரதவர்"(பட்டினப்பாலை 90), "மீன் எறி பரதவர்", "மீன் கொள் பரதவர்" என்றும் இவர்கள் "திமில்" என்னும் மீன்பிடிப் படகைக் கொண்டவர்கள் என்பதை "கொடுந்திமில் பரதவர்" "திண் திமில் பரதவர்" என்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

**உமணர்**

*நெய்தல் நிலத்தில் கடல் நீரைக்கொண்டு உப்பு விளைவித்து அதை எருது பூட்டிய வண்டியிலேற்றி தம்மகளிருடன் ஊர் தோறும் சென்று உப்பு விற்கும் தொழிலை உடையவர்கள் உமணர்கள்.*

***சில்பத உணவின் கொல்லைச் சாற்றி***
***பல் எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி*** ***(பெரும்பாணாற்றுப்படை.-64-65)***

*என்று உமணர்கள் உப்பு விற்றமையும்,*

*நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோ (அகநானூறு-140) என்று உப்பிற்கு விலையாக உமணர்கள் நெல்லைப் பெற்றமையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. மேலும் "நோன் பகட்டு உமணர்" "கொடும் கோல் உமணர்" என்றும் இலக்கியங்கள் உமணர்களைச் சுட்டுகின்றன.*

**நுளையர்**

*நெய்தல் நில மக்களுள் "கள் தயாரிக்கும்" தொழிலை மேற்கொண்டவர்கள் நுளையர்கள். குறிப்பாக "நுளைமகள்" என்னும் நுளைச்சியர் களிப்பு மிக்க கள்ளைத் தயாரிப்பதில் கைதேர்ந்தவர்களாகவும், கள் விற்பவர்களாகவும் இருந்துள்ளனர். நுளைமகள் கள் அரித்த செய்தியை,*

***நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த***
***பழம்படு தேறல்*** ***(சிறுபாணாற்றுப்படை.158)***

*என்று சிறுபாணற்றுப்படை குறிப்பிடுகின்றது. நுளைச்சியர் "கள் அடு மகளிர்" (பெரும்பாணற்றுப்படை 339) என்றும் சங்க இலக்கியத்தில் சுட்டப்படுகின்றனர். இவர்கள் இல்லத்திற்கு வந்த விருந்தினர்களுக்கு வேண்டியவரை கள்ளைக் கொடுத்து விருந்துபசரிக்கும் தன்மையுடையவர்கள் நுளையர்கள்.*

**வலைஞர்**

*நீர் நிலைகளில் வலை கொண்டு மீன்பிடித்த சங்ககால நெய்தல் நில மக்களுள் ஒருவர் வலைஞர். இவர்கள் கடல் மட்டுமின்றி குளம், ஆறு என பல்வேறு நீர் நிலைகளிலும் வலைவீசி மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்டனர். "கொடு முடி வலைஞர்" என பெரும்பாணாற்றுப்படை (274) குறிப்பிடுகிறது. பொய்கையில் வள்ளிக்கொடிகளைத் தள்ளி வலிமையுடைய மீன்களைப் பிடித்த வலைஞர்கள் அவற்றை விலைகூறி விற்ற செய்தியை,*

***வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கைக்***
***கம்புட் சேவ லின்றுயி லிரிய***
***கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர் (மதுரைக்காஞ்சி 253-256)***

*என்ற பாடலில் மாங்குடிமருதனார் குறிப்பிடுகிறார். இதேபோல் பூக்கள் நிரம்பிய பொய்கையில் ஆரல்மீன், வாளைமீன், யாமைமீன், வாரால்மீன், கயல்மீன் போன்ற மீன்களை வலைஞர்கள் பிடித்த செய்தியை (புறநானூறு.249-1-3) என்ற புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.*

**வாழ்விடம்**

*சங்ககால கடற்கரைப் பகுதிகள் சிறுகுடி,பட்டினம்,பாக்கம் என வகைப்படுத்தப்பட்டன. இவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் சிறிய அளவிலான குடிசைகளை அமைத்து வாழ்ந்தனர். வஞ்சி மரமும் காஞ்சிமரமும் ஆகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்கு நடுவே கலந்து நாற்றி வேழக்கோலை வரிசையாக நிரைத்துத் தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட சிறிய குடிலும், அதன் மேல் சுரைக்காய், புன்னங்காயும் படர்ந்திருக்கும் வீட்டின் முற்றத்தில் மீனை வாரியெடுக்கும் பறிகள் காணப்படும். இத்தகைய குடியிருப்பு நுளையர்களுடையது என்பதை*

***வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்***
***தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த***
***குறியினைக் குரம்பை***
***பறி உடை முன்றில்....... (பெரும்பாணாற்றுப்படை263-67)***

*என்று பெரும்பாணாற்றுப்படையும், குலைகொண்ட தென்னை, வாழை, காந்தள் மலர்ந்த சுரபுன்னையினையும், துடி போன்ற ஓசையுடைய பேராந்தையினையுமுடைய குடியிறுப்பையுடையதாகிய பாக்கத்தில் வாழும் பரதவர் என்று பொருநராற்றுப்படையும் (208-218) நெய்தல் நில மக்களின் குடியிருப்பைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றது.*

**விருந்தோம்பல்**

*நெய்தல் நில மீனவமக்கள் தங்கள் இல்லத்திற்கு வரும் இரவலர்களுக்கும், விருந்தினர்களுக்கும் அறுசுவை உணவைப் போதும் எனும் படியாக அளித்து உபசரிக்கும் பண்பினை உடையவர்கள். பாணர், பொருநர், விறலியர் போன்ற அலைகுடியினர் பரதவர்களின் குடிகளுக்குச் சென்றால் அவர்களுக்கு கிடைக்கும் உணவுமுறைகள் பற்றி ஆற்றுப்படை நூல்கள் விவரிக்கின்றன. பெரும்பாணாற்றுப்படையில் நுளையரின்*

இல்லத்திற்கு இரவலர்கள் சென்றால், வட்டில் கழுவின வடிந்துசிந்தும் சிலநீர் பலகால் வடிதலின் நிறைந்து வழிந்த குழம்பும் கொழுத்த பன்றியின் இறைச்சியும், களிப்பு மிக்க கள்ளோடு பெறுகுவீர் என்பதை

**கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய**
**வார்ந்து உகுசில் நீர் வழிந்த குழம்பில்**
**ஈர்சேறு ஆடிய இருபல் குட்டிப்.......**
**கூர்நறா பெறுகுவீர் (பெரும்பாணாற்றுப்படை339-45)**

என்ற பாடல்வழி அறியமுடிகின்றது. இதேபோல் ஓய்மாநாட்டு நெய்தல் பரதவர் நுளைச்சியர் அரித்த கள்ளோடு, குழல் மீன் கறியையும் விருந்தினர்க்கு கொடுக்கும் செய்தியை சிறுபாணாற்றுப்படை(156-163) மூலம் அறியலாம். இவ்வாறாக சங்ககால நெய்தல் நில மக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

### சுறாமுள் வழிபாடு

பெருங்கடல் பரப்பில் வலிமையான சுறாமீனை வேட்டையாடும் வலிமைகொண்ட பரதவர்கள் அவற்றின் கூர்மையான முள்ளை வழிபடும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அமாவாசை நாளில் இரவில் மீன்பிடிக்கச் செல்லாது பரதவர்கள் அவர்களுடைய தழையாடை அணிந்த பெண்கள், குழந்தைகளுடன் கடற்கரை மன்றத்தில் கூடுவர். வெண்டாளி மலர்மாலையை அவர்கள் அணிந்திருந்தனர். கடலிலிருந்து பிடித்துக் கொண்டுவரப்பட்ட சினைச் சுறாமீனின் கூர்மையான ரம்பம் போன்ற முள்ளை வெட்டி எடுத்து, அதனை பொது மன்றத்தின் நடுவே நட்டு மலர்தூவி வழிபாடுசெய்கின்றனர். கள்ளையுண்டு மகிழ்ச்சி கொள்கின்றனர் என்று

**வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்**
**சினைச்சுறவின் கோடுநட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
**மடற்றாழை மலர்மலைந்தும்....**

புன்றலை யிரும் பரதவர்... (பட்டிணப்பாலை85-91) என்ற பட்டினப்பாலை பாடலில் குறிப்பிடப்படுகின்றது. கடல் வளமையின் குறியீடான சுறாமீனை வேட்டையாடி அதைத் தங்கள் குலதெய்வமாக எண்ணி பரதவ மக்கள் வழிபாடு செய்துள்ளனர். ''சினை'' என்பது ''விருத்தி'' அல்லது ''செழுமையின்'' அடையாளமாகும். எனவே கடலில் மீன்வளம் பெருக வேண்டும் என்பதற்காகச் சினைச் சுறாவின் கோட்டை நட்டு வழிபட்டனர் இது வளமை வழிபாடாகும் இது குலக்குறி வழிபாடாகவும் இருந்திருக்கலாம். (விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள். 2006.ப.91) என்ற ஆ.தனஞ்செயன் கருத்தும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

### பொழுதுபோக்குகள்

நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தல் இல்லாத நாட்களில் சுற்றத்தோடே கூடி வேட்டை இறைச்சி உணவுகளை உண்டு பிற நிலத்தவர்களுடன் சேர்ந்து விளையாடும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர். சான்றாக பட்டினப்பாலையில் பரதவர்கள் கடல் இறாலின் சுடப்பட்ட உணவைத் தின்றும், வயல் ஆமை புழுக்கின இறைச்சியைத் தின்றும், மணலிலே படர்ந்த அடப்பம், ஆம்பல் பூக்களைத் தலையிலே சூடியும் மக்கள் கூடும் மன்றத்திலே ஆட்டுக்கிடாய் சண்டையும், சிவல் என்னும் பறவைச்சண்டையும் விளையாடிய செய்தியை

***கடல் இறவு இன்சூடு தின்றும்***
***வயல் ஆமை புழுக்க உண்டும்***
***வறள் அடும்பின் மலர் மலைந்தும்.........***
***மலர்தலை மன்றத்து***
***மேழகம் தகரொடு சிவல் விளையாட***
***பலர் உடன் குழீஇ*** ***(பட்டினப்பாலை.63-69)***

*என்ற பாடலில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார். பரதவர்கள் பிற நில மக்களுடன் இணங்கி பொழுது போக்குகளில் கலந்திருந்தமையும் பரதவர்களின் மகிழ்ச்சிக் களிப்பையும் இப்பாடல்வழி அறிய முடிகின்றது.*

**பரதவ மகளிரின் குரவைக் கூத்து**

*மதுரைக் காஞ்சியில் நகரின் சிறப்பைக் கூறுமிடத்து பலதரப்பட்ட ஓசைகள் இடம்பெறுகின்றன. அவற்றில் தொழுவரின் சிலம்போசை, நீரை குளங்களில் இருந்து இரைக்கும் ஓசை, கிடாச்சண்டை விடுகின்றவர்களின் ஓசை, எருதுகளின் மணியோசை இவற்றோடே நீல மணிபோலும் பூக்களையுடையவாகிய முங்கில்களையுடைய மணற்குன்றுகள் மிக்க கடற்கரையில் இருக்கும் பரதவர்மகளிர் கூடி குரவைக் கூத்தாடுதலின் ஓசை ஆரவாரமாக இருந்ததை,*

***மணி பூ முண்டகத்து மணல் மலி கானல்***
***பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப*** ***(மதுரைக்காஞ்சி 96-97)***

*என்ற பாடல் குறிப்பிடுகின்றது. பரதவ மகளிர் குரவைக் கூத்தாடுதலில் நாட்டமுடையவர்களாகவும் கடற்கரைகளில் பொழுதுபோக்காக மகிழ்ச்சி ஆர்ப்பரிக்க அவர்கள் கூத்தாடி மகிழ்ந்ததையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.*

**முடிவுரை**

*சங்ககால நெய்தல் நில மக்கள் தங்களுக்கென குறிப்பிட்ட தொழிலைக் கொண்டிருந்த போதிலும் பிறநில மக்களுடன் இணைந்த வாழ்வியலை மேற்கொண்டுள்ளனர். அவர்களின் பண்டமாற்று முறையும், பொழுதுபோக்கு விளையாட்டுகளும் இதற்குச் சான்றாகின்றன. மேலும் கடுமையாக உழைத்தும், சுற்றம் சூழ உண்டுகளித்தும், இல்லாதார்க்குக் கொடுத்தும் அறம் சார்ந்த வாழ்க்கையை பரதவர், உமணர், நுளையர், வலைஞர் ஆகிய மக்கள் வாழ்ந்தமையை ஆற்றுப்படை இலக்கியங்கள் வழி அறிமுடிகின்றது.*

**துணைநூற் பட்டியல்**


1. *சாமிநாதையர்,உ.வே.(பதி.), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம், சென்னை,2017.*
2. *சாமிநாதையர், உ.வே.(பதி.) புறநானூறு மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம், சென்னை,2019.*
3. *தனஞ்செயன். ஆ, விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள் இனவரைவியல் ஆய்வு, வல்லினம் வெளியீடு, புதுவை,2006.*
4. *வித்தியானந்தன். சு, தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2013.*
5. *வேங்கடசாமி நாட்டார், ந.மு (பதி.), அகநானூறு-மூலமும் உரையும், கௌரா பதிப்பகம். 2019.*